# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**ஆணை எண். 163/2018**

**நாள் : 20/07/2018**

திரு P. பாலன்,
பழனி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
பழனி நகராட்சி,
பழனி. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பழனி, 103–A, கட்டபொம்மன் தெரு முகவரியில் வசிக்கும் திரு P. பாலன் அவர்களின் 04.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2018 அன்று பெறப்பட்டு, 163/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழனி, 103–A, கட்டபொம்மன் தெரு முகவரியில் வசிக்கும் திரு P. பாலன் என்பவர், செலவுச் சீட்டு எண். 72–இல் 31.08.2017 அன்று வழங்கப்பட்ட 048118 எண்ணிட்ட காசோலைக்கான சேமநலநிதிக்கான வட்டித் தொகை ரூ.32,192/– தனது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை எனத் தெரிவித்து, அத்தொகையினை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். எனினும், பழனி நகராட்சி ஆணையர் மேற்குறிப்பிட்ட தொகைக்கான காசோலையினை மனுதாரருக்கு வழங்கியுள்ளதாக 29.06.2018 நாளிட்ட கடித எண்.2284/பி2/2018–இல் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடிதத்தின் நகலும் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்ட தொகை தனது வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவில்லையெனில், இதுபற்றிய விவரங்களை அறிந்து கொள்ள சம்பந்தப்பட்ட நகராட்சியைத் தொடர்பு கொள்ளவேண்டுமேயன்றி இம்முறைமன்ற நடுவம் அல்ல. எனவே, இது சம்பந்தமாக பழனி நகராட்சியை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்துவதுடன், நிர்வாக நடைமுறை சம்பந்தப்பட்ட இனங்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்வதை தவிர்க்குமாறும் மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 20–ஆம்நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு P. பாலன,
கதவு எண். 103–A, கட்டபொம்மன் தெரு,
பழனி – 624 601.
திண்டுக்கல் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையாளர்,
பழனி நகராட்சி,
பழனி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி